செ.வெ. எண் : 163 நாள் : 10.04.2017

ந.க.545/2016/எஸ்6
நாள். 6.04.2017

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
காஞ்சிபுரம்.

## பத்திரிக்கைச் செய்தி

காஞ்சிபுரம் மாவட்டம், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் தலைமையில் எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டமானது கடந்த 30.03.2017 அன்று காலை 11.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. அவற்றில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்த குறைகளின் அடிப்படையில் பின்வரும் விவரங்கள் இம்மாவட்டத்தில் உள்ள எரிவாயு நுகர்வோர்களின் கவனத்திற்கும், பொது மக்களும் அறிந்துகொள்ளும் வகையில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பொதுமக்கள் தாங்கள் எரிவாயு சிலிண்டர் வாங்கும் போது அரசால் நிர்ணயித்துள்ள விலைக்கு அதிகமாக பணம் செலுத்த வேண்டியது இல்லை, அவ்வாறு எவரேனும் நிர்பந்தித்தால் புகார் அளிக்கலாம். மேலும் உங்கள் வீடுகளுக்கு எரிவாயு சிலிண்டர் விநியோகம் செய்யும் போது எடையளவில் சந்தேகம் இருப்பின் எடைபோட்டு வழங்குமாறு கூறலாம், இதற்கென விநியோகம் செய்யும் ஊழியர்கள் எடைக்கருவியை உடன் வைத்திருப்பர், அவ்வாறு எடையிட்ட பின், அளவு குறைந்திருப்பின் அச்சிலிண்டரை அவரிடமே ஒப்படைத்து வேறு சிலிண்டர் பெறலாம், மேலும் சீலிட்ட உறை இருப்பதை உறுதி செய்யவேண்டும். மேலும் வங்கி கணக்கில் எரிவாயு சிலிண்டர் வாங்கியதற்காக வழங்கப்படும் மானியத்தொகைவரவில்லை எனில் உங்களுடைய ஏஜென்சியை அணுகி field Officer-டம் புகார் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.